# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006.

## 2024–2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு

## தனித்தேர்வர்கள் அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கு விண்ணப்பித்தல் மற்றும் அறிவியல் பாட செய்முறை பயிற்சிக்கு பதிவு செய்வது தொடர்பான செய்திக் குறிப்பு

### I. செய்முறை பயிற்சிக்கு ஏற்கனவே பதிவு செய்த தேர்வர்கள்:

- நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல்–2025, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுத விரும்பும் தனித்தேர்வர்களுக்கு (முதன்முறையாக பத்தாம் வகுப்பு தேர்வெழுதவுள்ள / ஏற்கனவே பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி அறிவியல் செய்முறைத்தேர்வில் தேர்ச்சி பெறாத /வருகைப்புரியாத தேர்வர்கள்) **அறிவியல் பாட செய்முறைத்தேர்வு பயிற்சிக்கு பதிவு செய்ய 02.09.2024 முதல் 20.09.2024 வரை வாய்ப்பு வழங்கப்பட்டது.**
- அவ்வாறு பதிவு செய்த தேர்வர்கள் தற்போது, மார்ச்/ஏப்ரல்–2025, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு 06.12.2024 முதல் 17.12.2024 வரையிலான நாட்களில் (ஞாயிற்றுக்கிழமைகள் நீங்கலாக) சேவை மையத்திற்கு (NODAL CENTRE) சென்று செய்முறை பயிற்சி வகுப்பிற்கு பதிவு செய்ததற்கான ஒப்புகை சீட்டு சமர்ப்பித்து **அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கும் விண்ணப்பிக்க வேண்டும்.**

### II. செய்முறை பயிற்சிக்கு புதியதாக பதிவு செய்யும் தேர்வர்கள்:

- நடைபெறவுள்ள மார்ச்/ஏப்ரல்–2025, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுத விரும்பும் **தனித்தேர்வர்களுக்கு அறிவியல் பாட செய்முறைத்தேர்வு பயிற்சிக்கு பதிவு செய்ய 02.09.2024 முதல் 20.09.2024 வரை இவ்வியக்ககத்தால் வாய்ப்பு வழங்கப்பட்டது.**
- **மேற்காண் நாட்களில் பதிவு செய்ய தவறிய தேர்வர்களும் அறிவியல் பாட செய்முறைத்தேர்வு பயிற்சிக்கு பதிவு செய்ய 06.12.2024 முதல் 13.12.2024 வரை (ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.**
- எனவே, தேர்வர்கள் இதற்கான விண்ணப்பப் படிவத்தினை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் **06.12.2024 முதல் 13.12.2024 வரை** பதிவிறக்கம் செய்து, விவரங்களை பூர்த்தி செய்து இரண்டு நகல்கள் எடுத்து **13.12.2024–ற்குள்** சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களை நேரில் அணுகி, பதிவுக்கட்டணமாக ரூ.125/– ஐ செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். **இது பயிற்சி வகுப்பிற்கான பதிவு மட்டுமே.**
- அவ்வாறு பயிற்சி வகுப்பில் பெயரை பதிவு செய்து கொண்டத் தேர்வர்கள் மேற்காண் நாட்களில் சேவை மையத்திற்கு (NODAL CENTRE) சென்று செய்முறை பயிற்சி வகுப்பிற்கு பதிவு செய்ததற்கான ஒப்புகைச் சீட்டு சமர்ப்பித்து **அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கும் விண்ணப்பிக்க வேண்டும்.**

.....2...

**II. செய்முறைத் தேர்விற்கு பயிற்சி பெற்றத் தேர்வர்கள்:**

- முந்தைய பொது/துணைத் தேர்வு பருவங்களில் அறிவியல் செய்முறைத் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு மாவட்டக் கல்வி அலுவலகங்கள் வாயிலாக பதிவு செய்து, செய்முறைத் தேர்விற்கு பயிற்சி பெற்று செய்முறைத் தேர்விற்கு வருகைபுரியாத தேர்வர்கள் பயிற்சி மேற்கொண்ட பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து அசல் அத்தாட்சி சான்றிதழை பெற்று அதனை சேவை மையத்தில் (NODAL CENTRE) சமர்ப்பித்து மேற்காண் நாட்களில் அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கும் விண்ணப்பிக்க வேண்டும். செய்முறைத் தேர்விற்கு வருகைபுரியாத தேர்வர்கள் மற்றும் செய்முறைத்தேர்வில் தோல்வியுற்ற தேர்வர்கள் அறிவியல் பாடத்தில் கருத்தியலில் தேர்ச்சி பெற்றிருப்பின் மீண்டும் கருத்தியல் தேர்வு எழுத வேண்டாம். செய்முறைத் தேர்வு மட்டும் எழுத வேண்டும்.
- **அறிவியல் பாடத்தை பொருத்தவரை கருத்தியல் / செய்முறை என்ற இரு பகுதிகளில் எந்த பகுதியில் தோல்வியடைந்தாலும் தோல்வி அடைந்த பகுதிக்கு மட்டும் தேர்வெழுத வேண்டும் (கருத்தியல் தேர்வில் தேர்ச்சி பெற குறைந்தபட்ச மதிப்பெண் 75-க்கு 20-ம், செய்முறைத் தேர்வில் 25-க்கு 15-ம் பெற வேண்டும்)**
- செய்முறைத் தேர்வு மட்டும் எழுதவுள்ள தேர்வர்கள் செய்முறைத் தேர்வு குறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள வேண்டும்.
- மேற்கண்ட செய்முறைத் தேர்வு மட்டும் எழுதும் தனித்தேர்வர்களும் தவறாமல் சேவைமையத்திற்கு (NODAL CENTRE) சென்று அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கு விண்ணப்பித்து பதிவெண் பெற்றால் மட்டுமே மதிப்பெண் சான்றிதழில் செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் பதிந்து வழங்கப்படும்.

**மேற்காண் தேர்வர்கள் அனைவரும் இவ்வியக்ககத்தால் வழங்கப்படும் மார்ச்/ஏப்ரல்-2025 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டைக் கொண்டே செய்முறைத்தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள்.**

**தேர்வர்கள் சேவை மையங்கள் தொடர்பான விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் SSLC Examination-ல் Service Centre Details என்பதை click செய்து அறிந்து கொள்ளலாம்.**

மேலும், கூடுதல் விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளுமாறு தேர்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**இடம்: சென்னை-6.**

**நாள் :** 05.12.2024.